**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் வியாழக்கிழமை</u>
**<u>இ.ம.எண்.02/2022 இன் அ.வ.எண்.98/2022</u>**

V.கலைச்செல்வி ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

K.S.சரவணகுமார் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 31.10.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>ஆணையுரை</u>**

மனு ஏ அட்டவணை விவசாய பூமிகளுக்கு செல்வதற்கு மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரரோ, அவரின் வேலையாட்களோ, அவரின் உறவினர்களோ மற்றும் உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் ஆட்சேபணையோ, இடைஞ்சலோ, தடையோ, சேதமோ செய்யக்கூடாது என்றும், தோட்டத்தண்ணீரை தடத்தில் விடக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சங்கதிகளின் சுருக்கம்</u> :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுச்சொத்து மனுதாரருக்கு அவரது கணவர் விவேகானந்தன் செல்லியன் அவர்களால் கடந்த 23.03.2016 அன்று எழுதப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்பட்டதாகும். மனுச்சொத்துக்கள் ஆதியில் சண்முகவேல் என்பவருக்கு சுயராஜிய வகையில் பாத்தியப்பட்டு, அவர் அபிபக்தநிலையில் காலமாகிவிட்டபடியால் அவரின் வாரிசுகளான அவரது மனைவி தயாநிதி, மனுதாரரின் கணவர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய மூவரும் இந்து வாரிசுரிமை சட்டப்படி தலா 1/3 பாக பாத்தியம் ஏற்பட்டு பொதுவாக அனுபவித்து வந்த பொழுது மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் தாயாரான தயாநிதி பொள்ளாச்சி, சார்பு நீதிமன்றத்தில் சண்முகவேலுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் இருந்து அவருக்குள்ள பாகத்தை பிரித்து தரும்படி அ.வ.எண்.126/2013 என்ற தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

**2.2)** மேற்படி தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு மூவரும் சமரசம் செய்து பொள்ளாச்சி மக்கள் நீதிமன்றம் முன்பு கூட்டு சமரச மனுவை தாக்கல் செய்ததை சமரச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இறுதிநிலை தீர்ப்பாணை மேற்படி வழக்கில் பிறப்பித்து மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை படி கூட்டுக்குறிப்பாணையில் கண்டுள்ளபடி சொத்துக்களை சுவாதீனம் செய்து கொண்டார்கள். மேற்படி கூட்டு குறிப்பாணையில் D அட்டவணையில் பொது பாத்தியங்கள் அனுபவிப்பது பொறுத்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணைப்படி அவரவர் சொத்துக்களை அனுபவித்து வருகின்றனர். மேலும், D அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி வண்டித்தட பாத்தியம் மற்றும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தடமானது அரசு இட்டேரியிலிருந்து வடபுறம் உள்ள எதிர்மனுதாரரின் பூமிக்குள் வந்து பின்னிட்டு

மனுதாரின் கணவருக்கு ஒதுக்கப்பட்ட பூமிக்குள் வந்து தொடர்ந்து, தயாநிதி பூமிக்கு சென்று சேர்கிறது. மேற்படி அ.வ.எண்.126/2013–ற்கு பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையில் D அட்டவணையிலும், அவரவர் பங்கு சொத்து அட்டவணையிலும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

**2.3)** மேற்படி வண்டித்தடமானது மனுச்சொத்துக்களுக்கு சென்று வருவதற்காக விடப்பட்டுள்ள வண்டித்தடம் ஆகும். எனவே, மேற்படி வண்டித்தடம் மனுதாரரின் கணவர், எதிர்மனுதாரர் மற்றும் அவர்களின் தாயார் தயாநிதி ஆகியோர் எவ்வித தங்குதடையும் இன்றி பயன்படுத்தி வந்தார்கள். அதன்பின்னிட்டு மனுதாரரின் கணவர் கடந்த 23.03.2016 தேதியில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரப்படி மனுச்சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வருகிறார். மேற்படி வண்டித்தடத்தை மனுதாரரின் கணவர் எவ்வாறு பயன்படுத்தி வந்தாரோ அவ்வாறே மனுதாரரும் பயன்படுத்தி வருகிறார்.

**2.4)** மனுதாரருக்கும், மனுதாரரின் கணவருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 2019 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சிறுமனசங்கடம் காரணமாக மனுதாரர், மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடம் ஆரம்பிக்கும் இடமான எதிர்மனுதாரர் பூமியில் வரும்பொழுது எதிர்மனுதாரரும், அவரின் தோட்டத்தில் பணிபுரியும் ஆட்களும் இடைஞ்சல் செய்வதோடு வேண்டுமென்றே தகராறும் செய்து வந்தார்கள். கடந்த 24.07.2020 அன்று காலை 9.30 மனுதாரரும், அவரது கணவரும் மனு பி வண்டித்தடத்தில் வரும்பொழுது தகராறில் ஈடுபட்டதால் ஆனைமலை காவல் நிலையத்தில் இணையவழி மூலம் எதிர்மனுதாரர்பேரில் புகார் கொடுத்து அதற்கு அவர்கள் 211/2020 என்ற எண்ணில் 28.07.2020 தேதியிட்ட CSR கொடுத்து விசாரணை மேற்கொண்டார்கள். அதன்பிறகு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் எந்த பிரச்சனையும் மனுதாரரிடம் செய்யமாட்டேன் என்று எழுதிக் கொடுத்துள்ளார்.

**2.5)** அதன்பிறகு ஆறுமாதங்கள் எந்த தொந்தரவும் செய்யாமல் பின்னிட்டு கடந்த 16.03.2021 அன்று காலை 11.30 மணிக்கு மனுதாரரும், அவரது கணவரும் மனுச்சொத்துக்களுக்கு டிராக்டர் மூலம் செல்லமுடியாத அளவு மனு பி அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரரும், அவரது ஆட்களும் இருசக்கர வாகனங்களை நிறுத்தி வைத்து அவர்களது வேலை முடிந்த பிறகு தான் எடுப்பேன் என ரகளையில் ஈடுபட்டதால் மனுதாரரும், அவரது கணவரும் பயந்து கொண்டு எதிர்மனுதாரரின் பணி முடித்து செல்லும்வரை காத்திருந்து மனுச்சொத்துக்கு சென்றனர். மேற்படி நிகழ்வுகள் குறித்து கடந்த 18.03.2021 அன்று இணையவழி மூலம் புகார் ஆனைமலை காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டு 45/2021 என்ற எண்ணில் CSR ரசீது கொடுத்து விசாரணை மேற்கொண்டார்கள். அப்பொழுதும் எதிர்மனுதாரர் இனிமேல் எவ்வித பிரச்சனையும் செய்யமாட்டேன் என்று உறுதி கூறினார்.

**2.6)** பின்னிட்டு கடந்த இரண்டு மாதங்களாக எதிர்மனுதாரர் அவரது பூமியில் சொட்டுநீர் டியூப்களை எடுத்துவிட்டு அதில் அதிக அளவு தண்ணீர் வெளியேறும் விதமாக Tap Open செய்துவிட்டு வண்டித்தடம் முழுவதும் தண்ணீரை தேக்கி சேறும், சகதியுமாக்கி வண்டித்தடத்தின் ஸ்திரத்தன்மையை முழுவதும் ஆக மாற்றி பெரும் சேதத்தை உருவாக்கி மனுதாரர் அவரது கணவருடன் இருசக்கர வாகனத்தில் கூட செல்லமுடியாமல் செய்துள்ளார். இந்நிலையில், எதிர்மனுதாரரின் செயல் பொறுத்து மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் அவர்கள் விசாரணை செய்யும் பொழுதெல்லாம் இனிமேல் எவ்வித இடைஞ்சலும் செய்யமாட்டேன் என்று உறுதி கூறிவிட்டு சிறிது காலம் கழித்து தொடர்ந்து இடைஞ்சலும், தகராறும் செய்து வருகிறார். அவரது மேற்படி செயலால் மனு ஏ அட்டவணை விவசாய பூமிக்கு சென்று அன்றாட விவசாய காரியங்களில் ஈடுபட முடியாமல் பெரும் பொருளாதார இழப்பும், மன உளைச்சலும் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டி மனுதாரர் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3)** **<u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>** **:**

எதிர்மனுதாரர், இந்த மனுதாரருக்கு எதிராகவும், வேறு நபர்களுக்கு எதிராகவும் மாண்பமை முதன்மை உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது நிலுவையில் இருந்து வரும் அசல் வழக்கு எண்.25/2021 வழக்கிற்கு எதிர் வினையாற்றவே மனுதாரர் மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளார். தாவா பி அட்டவணை சொத்து என்பது தாவா ஏ அட்டவணை சொத்துக்கு சென்று வருவதற்கான வண்டித்தடம் என குறிப்பிட்டுள்ளது தவறாகும். மேற்படி வண்டி தடமானது மனுதாரரின் பூமியில் அமைந்துள்ளதும், எதிர்மனுதாரரின் பூமிக்கு நீர்பாசனம் செய்ய பயன்படுத்தி வரும் நிலவாய்க்கால்களுக்கு மராமரத்து செய்யவும் மடைக்கு செல்லவும் எதிர்மனுதாரரும், அவரது ஆட்கள் வகையறா பேர்களும், கனரக வண்டி வாகனங்கள் போகவர பயன்படுத்தி வரும் வண்டிதடம் ஆகும்.

**3.2)** கடந்த 2019 வது வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட சிறு மனசங்கடம் காரணமாக மனுதாரரும், அவரது கணவரும் தாவா பி அட்டவணை வண்டிதடம் ஆரம்பிக்கும் பிரதிவாதி பூமியில் வரும்போது பிரதவாதியும், அவரது ஆட்களும் வேண்டுமேன்றே இடஞ்சலும் தகராறும் செய்தார்கள் என்று மனுதாரர் தரப்பில் அளிக்கப்பட்ட புகார் குறித்து காவல் நிலையத்தில் விசாரணை செய்து புகாரில் உண்மை தன்மை இல்லை என்பதால் மனுதாரரை எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள் என்பதே உண்மை.

**3.3)** எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட பனை மரங்களில் இருந்து பனை ஓலைகளை வெட்டி டிராக்டரில் ஏற்றி கொண்டு இருந்த போது அங்கு வந்த மனுதாரர் மேற்படி அ.வ.எண்.25/2021 வழக்கினை மனுதாரருக்கு எதிராக போட்டதற்கு தகராறு செய்துவிட்ட வேண்டுமேன்றே இணைய வழியில்

ஆனைமலை காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்து இந்த எதிர்மனுதாரரை அவர் தாக்கல் செய்த அ.வ.எண்.25/2021 வழக்கை வாபஸ் பெற நிர்பந்தித்து வந்தார். எதிர்மனுதாரர் அதற்கு மறுத்தால் இந்த வழக்கினை பொய்யான சங்கதிகள் கண்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளார்.

**3.4)** தாவா பி ஷெட்யூல் வண்டி தடமானது எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பொது வண்டித்தடமாகும். மேற்படி வண்டித்தடத்தில் மூலமாகவே எதிர்மனுதாரரின் ஆட்களும், கனரக வண்டி வாகனங்களும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்கும் மனுதாரர் பூமியில் அமைந்துள்ளதும் எதிர்மனுதாரர் பூமிகளுக்கு நீர்பாசனம் செய்து வருவதுமான நில வாய்க்காளுக்கு செல்லவும் தண்ணீர் மடையை எடுத்துவிட வந்து போக நடைதட பாத்தியமும் மேற்படி நிலவாய்க்காலில் தென்புறம் உள்ள பகுதியில் கனரக வண்டி வாகனங்கள் எடுத்து சென்று வாய்க்கால் பகுதியை பழுது பார்க்கவும் உரிமை உண்டு. மேலும், மேற்படி வாய்க்காலுக்கு தென்புரம் உள்ள பகுதியில் வாய்க்காலை பராமரிக்க கனரக வண்டி வாகனங்களை ஓட்டி செல்வதற்கு இடையூறு ஏற்படும் என்பதால் மேற்படி பகுதியில் தென்னை மரங்களை தவிர வேறு எந்த விவசாயமும் செய்யக்கூடாது என்ற நிபந்தனையை அ.வ.எண்.126/2013 வழக்கில் மனுதாரரின் கணவரும், எதிர்மனுதாரரும், அவர்களின் தாயாரும் ஒப்புக்கொண்டுதான் சமரச தீர்ப்பு பெற்றுள்ளார்கள். எனவே, தாவா வண்டித்தடத்தை சேதப்படுத்தினால் எதிர்மனுதாரருக்கும் இழப்பு ஏற்படும்.

**3.5)** வழக்கிற்கு பின்னிட்டு மனுதாரர் வேண்டுமேன்றே எதிர்மனுதாரரின் பூமிக்கு பாசனம் செய்து கொண்டிருந்த சொட்டு நிர் குழாயை சேதப்படுத்தி அதனை ஆதரவாக கொண்டு ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் அளித்து எதிர்மனுதாரரை வேண்டுமேன்றே அழைக்கழிக்க முயற்சி செய்தார்.

அப்போதும் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் வண்டித்தடத்தினை சேதப்படுத்துபவர்களை கண்காணிக்க கேமரா பொருத்திக்கொள்ள அனுமதிகேட்டபோது மனுதாரர் அதற்கு கடுமையாக ஆட்சேபணை செய்தார். மனுதாரர் பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் பெற்றுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளையால் தற்போது இந்த எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட வாய்க்கால் மடை ஆகிய பகுதிகளுக்கு செல்லமுடியாமல் தடுத்துவிட்டார்கள்.

**3.6)** மனுதாரர் அவரது அடியாட்களும் சேர்ந்து மடைப் பகுதியில் பள்ளம் பறித்து தண்ணீர் எதிர்மனுதாரரின் பூமிக்கு வரவிடாமல் செய்துள்ளார்கள். எனவே, மனுதாரருக்கு அளித்துள்ள இடைக்கால உறுத்துக்கட்டளையை ரத்து செய்து உத்தரவிட வேண்டிய அவசியமும், நியாயமும் உள்ளது. மேலும், மனுச்சொத்துக்களின் உண்மையான தன்மையும், தற்போதைய நிலையையும் சரிவர ஆவணங்கள் மூலம் தெரிந்து கொள்ளாமல் தாக்கல் செய்துள்ள மனு அபராத செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** **<u>பிரச்சினை</u>** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.11** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.9** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7)** மனுச்சொத்துக்களை மனுதாரருக்கு அவரது கணவர் விவேகானந்தன் செல்லியன் அவர்களால் கடந்த 23.03.2016 அன்று எழுதப்பட்ட

செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்பட்டதாகும் என்று தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து மேற்படி 22.03.2016 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் (ம.சா.ஆ.1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 கணினி சிட்டா, ம.சா.ஆ.3 அடங்கல் பதிவேடு, ம.சா.ஆ.4 உரிமை சான்று ஆகியவை மனுதாரர் பெயரில் உள்ளது. மேற்படி ஆவணங்கள் மனுசொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமையையும், அனுபவத்தையும் நிரூபிக்கும் வகையில் உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பிலும் மனு ஏ அட்டவணை சொத்தில் மனுதாரருக்கு உள்ள உரிமை மற்றும் அனுபவம் மறுக்கப்படவில்லை.

**8)** வழக்கு பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டித்தடம் இருவருக்கும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பபட்டது என்றும், அதை தான் சேதப்படுத்தவில்லை என்று எதிர்மனுதாரர் எதிருரையில் கூறியுள்ளார். ம.சா.ஆ.7 முதல் ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வழக்கு பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டிப்பாதை குறித்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர் பெயரில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதும், எதிர்மனுதாரர் மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது. ஆகவே, மனு பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டிப்பாதையை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் இடையூறு ஏற்படுத்துகிறார்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9)** மேற்கண்டவாரான பரிசீலனையிலிருந்து மனு ஏ அட்டவணை விவசாய பூமிகளுக்கு செல்வதற்கு மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரரோ, அவரின் வேலையாட்களோ, அவரின் உறவினர்களோ மற்றும் உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் ஆட்சேபணையோ, இடைஞ்சலோ, தடையோ ஏற்படுத்தகூடாது என்பதை பொறுத்து மனுவினை அனுமதிப்பதற்கு போதிய முகாந்திரமும்,

சமநிலை சமவாய்ப்பும் உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு மனு ஏ அட்டவணை விவசாய பூமிகளுக்கு செல்வதற்கு மனு பி அட்டவணையில் கண்டுள்ள வண்டித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதை எதிர்மனுதாரரோ, அவரின் வேலையாட்களோ, அவரின் உறவினர்களோ மற்றும் உள்ளீட்டாளர்களோ எவ்வகையிலும் ஆட்சேபணையோ, இடைஞ்சலோ, தடையோ ஏற்படுத்தகூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN Digitally signed by N BHARATHIRAJAN Date: 2022.11.10 19:48:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் பட்டியல்</u> :**

– இல்லை –

**<u>மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.03.2016 | மனுதாரர் பெயருக்கு, அவர் கணவர் மனுச்சொத்து பொறுத்து எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | 06.12.2014 | பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தின் அ.வ.எண்.126/2013 ல் சமரச நீதிமன்றம் பிறப்பித்த இறுதி நிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 03.12.2021 | மனுதாரர் பெயரில் உள்ள கணினி சிட்டா அசல் |
| ம.சா.ஆ.4 | | மனுதாரர் பெயரில் உள்ள அடங்கல் உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | | மனுச்சொத்து பொறுத்து கிராம நிர்வாக அலுவலர் |

| | | |
|---|---|---|
| | | வழங்கிய உரிமை சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.6 | | மனுச்சொத்திற்கான வரைபடம் |
| ம.சா.ஆ.7 | 25.07.2020 | மனுதாரர் ஆனைமலை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் |
| ம.சா.ஆ.8 | 28.07.2020 | ஆனைமலை காவல்நிலையத்தில் வழங்கிய CSR ரசீது |
| ம.சா.ஆ.9 | 18.03.2021 | மனுதாரரின் கணவர் ஆனைமலை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் |
| ம.சா.ஆ.10 | 20.03.2021 | ஆனைமலை காவல்நிலையத்தில் வழங்கிய CSR ரசீது |
| ம.சா.ஆ.11 | | மனுச்சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் </u>:**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.06.2018 | எதிர்மனுதாரர் ஆனைமலை காவல்நிலையத்தில் கொடுத்த புகார் |
| எ.ம.சா.ஆ.2 | | ஆனைமலை வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு எதிர்மனுதாரர் அனுப்பிய புகார் |
| எ.ம.சா.ஆ.3 | 27.09.2018 | எதிர்மனுதாருக்கு எதிராக A.சந்துரு மற்றும் A.அண்ணாத்துரை அளிக்கப்பட்ட புகாருக்கு ஆனைமலை காவல்ஆய்வாளருக்கு வழங்கிய பதில் அறிக்கை |
| எ.ம.சா.ஆ.4 | 28.09.2018 | பொள்ளாச்சி வட்டாட்சியரின் அழைப்பாணைக்கு எதிர்மனுதாரர் அளிக்கும் விளக்க கடிதம் |
| எ.ம.சா.ஆ.5 | 25.04.2019 | வேட்டைகாரன்புதூர், பரம்பிக்குளம் டிவிசன் செயற் பொறியாளருக்கு எதிர்மனுதாரர் எழுதிய கடிதம் |
| எ.ம.சா.ஆ.6 | 26.08.2019 | ஆனைமலை காவல் உதவி ஆய்வாளரிடம், எதிர்மனுதாரர் பூமிக்கு தண்ணீர் கொண்டு செல்ல பாதுகாப்பு கேட்டு எழுதி புகார் |
| எ.ம.சா.ஆ.7 | 28.07.2020 | ஆனைமலை காவல் ஆய்வாளரிடம் மனுதாரர் மற்றும் அவரது கணவருக்கு எதிராக எதிர்மனுதாரர் கொடுத்த புகார் கடிதம் |
| எ.ம.சா.ஆ.8 | | எதிர்மனுதாரர் மனுதாரர், அவரது கணவர் மற்றும் சில |

| | | |
|---|---|---|
| | | பேர் மீது மாண்பமை பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.25/2021–ன் பிராதின் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.9 | | அ.வ.எண்.25/2021–ற்கு மனுதாரர் மற்றும் அவரது கணவரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை |

N BHARATHIRAJAN

Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2022.11.10 19:47:59 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.